**செ.வெ.எண்: 39** **நாள்:12.08.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் ரூ.229 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் உள்ள மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய நீதிமன்ற கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த புதிய நீதிமன்ற கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழக அரசு அனைத்து அரசுத்துறைகளும் சிறப்பாக செயல்படும் வகையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி நமது மாவட்டத்தில் கீரனூரில் இயங்கி வரும் மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட தமிழக அரசு உத்தரவிட்டு அதனடிப்படையில் கீரனூரில் ரூ.229 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தில் கட்டுமானப்பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த கட்டிடத்தின் கீழ்தளம் நீதிமன்ற பகுதியாகவும் மேல்தளம் அலுவலக பகுதியாகவும் என இரண்டு தளங்களும் மொத்தம் 12,503 சதுர அடியில் கட்டப்பட்டு உள்ளது. இக்கட்டிடத்தில் நீதிபதி அறையுடன் கூடிய மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தபால் நிலையம் மற்றும் வங்கி கிளை இயக்குவதற்கு தனிஅறைகள், காணொலி காட்சி மூலம் வழக்கு நடத்த வலைத்தள அறை, அரசு வழக்கறிஞர்கள் அறை, காவலர்கள் காத்திருக்கும் அறை, கைதிகள் வைப்பு அறை, பொருட்கள் மற்றும் வைப்பறைகள், ஆண்,பெண் வாதிகளுக்கென தனித்தனி அறைகள், நீதிமன்ற அலுவலக அறை, அரசு பொது வழக்கறிஞர், உதவி அரசு பொது வழக்கறிஞர் அறைகள், சட்ட உதவி மைய அறை, கணினி அறை, நூலக அறை, அலுவலர்கள் ஓய்வறை, வழக்கறிஞர்கள் சங்க அறை,போன்றவை அமைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு தளத்திலும் ஆண்,பெண் இருபாலருக்கும் தனித்தனி கழிவறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கட்டிடத்தில் நீதிபதி அறைக்கு குளிரூட்டும் வசதி, மாற்றுத்திறனாளிகள் நீதிமன்றத்திற்கு எளிதாக வந்து செல்ல சாய்வு நடைப்பாதை, அனைத்து தளங்களிலும் மார்பனைட்தளம், பிற்காலத்தில் மேலும் தளங்கள் கட்டும்போது செல்வதற்கு மின்தூக்கி நிறுவுவதற்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வசதிகளுடன் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பேராம்பூர் ஊராட்சி, சாத்திவயல் கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு இயற்கை உரம் தயாரித்தல் பணி மற்றும் நாற்றங்கால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், தனித்துணைஆட்சியர்(சிறப்பு திட்டஅமலாக்கம்) திருமதி.கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.துரைராஜ், திருமதி.அமுதாபாலு, ஆத்மா குழுத்தலைவர் திரு.பால்ராஜ், வட்டாட்சியர் திருமதி.கிருஷ்ணவேணி, ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.கார்த்திக்பிரபாகரன், வழக்கறிஞர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**